பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைத்து பொதுமக்களையும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களையும் வரவேற்றார். மேலும் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ஆர். ரபீந்திரன் கல் குவாரி திட்டம் தொடர்பாக திட்ட ஆலோசகர் விவரித்த பின்னர் பொது மக்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார். மேலும், பொதுமக்கள் தங்களது கருத்துக்களை எழுத்துமூலமாக தெரிவித்தால் அதனையும் பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொண்டார்.

<u>திட்ட ஆலோசகர்</u>

திட்டத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர் அனைவரையும் வரவேற்று இத்திட்டம் தொடர்பாகவும் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் தொடர்பாகவும் பவர் பாயிண்ட் வாயிலாக விளக்கினார்.

1. திரு. ராமச்சந்திரன், சாமானிய மக்கள் கட்சி, தா. பேட்டை

கருத்து கேட்பு கூட்டத்தில் குவாரி சம்பந்தமாக தனது எதிர்ப்பை தெரிவித்தார். அது சம்பந்தமாக 12 பாயிண்டுகள் இருப்பதாகவும் அதனை தெரிவிப்பதாக கூறினார். திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், சேருகுடி கிராமம் ரபீந்திரன் கல்குவாரி புல எண் 378 ல் 2B2 மற்றும் 2C, புல எண் 380 , 381 ஆகியவற்றில் 3.19 ஹெக்டேர் அதாவது 8 ஏக்கர் கல்குவாரி இருக்கின்றது. விதிகள் 1959 பிரிவு 36 (1) சட்டத்திற்குப் புறம்பாக குவாரி குளத்திற்கு உள்ளே இரண்டு ஓடை 300 மீட்டர் சுற்றளவுக்குள் சேருகுடி மற்றும் சூரம்பட்டி ஊர் நத்தம் இருப்பது, குவாரி குளத்திற்கு உள்ளே வீடுகள் இருப்பது, குவாரிக்கு உள்ளேயே குட்டை 50 மீட்டர் சுற்றளவில் இருக்கக் கூடாது என்ற விதிமுறை இருக்கிறது. அதனால் கல்குவாரிக்கு அனுமதி தரக்கூடாது. ரபீந்திரன் கல்குவாரியில் புல எண் 378 2B2, 2C, 380 4B2, 381 2A ஆகியவற்றில் ஓடை வாய்க்கால் நீர் நிலைகள் இருப்பதால் 50 மீட்டர் 175 அடி இடைவெளி விட வேண்டும் என சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டம் கூறுகிறது என தெரிவித்தார்.

கல்குவாரி அமையும் புல எண் 389/4B2 குளத்திலே இரண்டு ஓடை செல்கிறது. இது கிராம புலப்பட வரைப்படத்தில் காட்டப்படுகிறது. கல்குவாரி குளத்திற்கு உள்ளே இரண்டு ஓடை செல்கிறது எனவே இதற்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. கல்குவாரி அமையும் புல எண் 378/2B2, 2C புலத்திலே ஓடை செல்கிறது. இது கிராம வரைபடத்தில் புல வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. கல்குவாரி குளத்திற்கு உள்ளேயே ஓடை செல்வதால் இதற்கு அனுமதி கொடுக்க முடியாது. ஓடையிலிருந்து கல்குவாரி புலத்திற்கு சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டப்பிரிவு 36 இன் படி 50 மீட்டர் 175 அடி இடைவெளி விட வேண்டும். ஆனால் சுரங்கத் திட்டத்தில் ஓடை இருப்பதை காட்டாமல் தயாரித்து இருப்பது சட்டப்படி விதி மீறலாகும். மேலும் சென்னை உதவி ஆணையர் நில நிர்வாகம் அவர்கள் தனியார் பட்டா நிலத்தில் இருந்தாலும் நிலவியல் பாதை மற்றும் ஓடை ஆகியவற்றைப் பற்றி வருவாய் துறையின் ஆணை 26 பிரிவு 15 பற்றிய அரசாணை ஓடை மற்றும் பாதை ஆகியவை அது அரசின் சொத்து என தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது

என தகவல் உரிமைச் சட்டத்தில் ஆழமாக கொடுத்துள்ளனர். எனவே ஓடை தனியார் பட்டா நிலத்தில் இருந்தாலும் அது சட்டப்படி அரசு சொத்து தான் இது கிராமத்தின் வரைபடத்தில் காட்டப்பட வேண்டும். ஓடைக்கு சட்டப்படி இடைவெளி விடாததால் சிறு கனிம விதிகள் 1959 சட்டப்படி அனுமதி தர முடியாது என தெரிவித்தார்.

குட்டை மற்றும் நீர்நிலை இருந்தால் 50 மீட்டர் இடைவெளி விட வேண்டும் சிறு கனிம விதிகள் சட்டம் 1959 கூறுகிறது. கல்குவாரி அமையும் புல எண் 380/4B2, குளத்திலே குட்டை செல்கிறது. இது கிராம வரைபடத்தில் புல வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. கல்குவாரி புலத்திற்கு உள்ளே குட்டை இருப்பதால் இதற்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. தாழ்வான மின்சார லைன் 50 மீட்டர் 175 அடி இடைவெளி விட வேண்டும் என சிறு கனிம விதிகள் 1959ன் படி சட்டம் கூறுகிறது. கல்குவாரி அமையும் புலத்திற்கு வடமேற்கு பகுதியில் தாழ்வான மின்சார லைன் செல்கிறது. இதற்கு 50 மீட்டர் இடைவெளி விட வேண்டும் என சுரங்க திட்டத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் 15 மீட்டர் கூட மின்சார லைனிற்கு இடைவெளி விடவில்லை என்பதுதான் எதார்த்த உண்மை. எனவே இந்த கல்குவாரிக்கு சட்டப்படி சிறு கனிம சலுகை விதிகள் 1959ன் படி அனுமதி தர முடியாது என தெரிவித்தார்.

உயர்மின் கோபுரத்திற்கும் கல்குவாரி அமையும் புலத்தின் வெளிமுனை பகுதிக்கும் 300 மீட்டர் அதாவது 1000 அடி இடைவெளி இருக்க வேண்டும். இந்திய மின்சார சட்டம் 1956 பிரிவு 83 (2)ல் தெளிவாக கூறப்பட்டுள்ளது. ஆனால் கல்குவாரியில் கிழக்கு புறப்பகுதியில் கல்குவாரியின் வெளிமுனை பகுதியில் 300 மீட்டர் சுற்றளவிற்கு உள்ளையே உயர் மின் கோபுரம் செல்கிறது. எனவே கல்குவாரிக்கு சட்டப்படி மின்சார சட்டம் 1956 பிரிவு 83 இரண்டின் படி அனுமதி தர முடியாது என தெரிவித்தார்.

அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் மனைகள் கட்டுமானங்கள் சிறு கனிம விதிகள் சட்டம் 1959 பிரிவு 36(1) அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் ஊராட்சி மற்றும் டி.டி.சி.பி ஆல் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகள் ஊர் நத்தம் மற்றும்

கோயில் போன்ற நிரந்தர கட்டுமானங்களும் அரசின் தொகுப்பு வீடுகள் பசுமை வீடுகள் இருந்தால் 300 மீட்டர் இடைவெளி விட்டு மட்டுமே குவாரி பணி செய்ய வேண்டும் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. குவாரி புலத்தின் வடமேற்கு பகுதியில் 260 மீட்டரில் வீடுகள் உள்ளன. மேலும் பல அதிகாரிகள் தவறாக வருவாய் துறை ஆவணங்களை சுட்டிக்காட்டி வீட்டில் யாரும் குடியிருக்கவில்லை, வீடு இடிந்து விட்டது, சேதாரம் அடைந்து விட்டது என தவறுதலாக கூறி மறைக்கின்றனர். அதனால் சிறு கனிம விதிகள் 1959 சட்டப்படி UDR வருவாய்த்துறை ஆவணங்களில் வீடு சேதம் அடைந்தாலும் வீட்டுமனை என்று தான் தெளிவாக கூறப்பட்டுள்ளது. கல்குவாரி அமையும் புலத்தில் 300 மீட்டர் தூரத்திற்கு வீடுகள் எதுவும் இருக்கக் கூடாது என்று சட்டம் இருக்கும் நிலையில் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் அருகில் இருக்கின்றது. எனவே இந்த கல்குவாரிக்கு சட்டப்படி இயக்க முடியாது இயங்கவும் கூடாது என தெரிவித்தார்.

இது தவிர கல்குவாரி அமையும் புலத்தை சுற்றியும் 300 மீட்டர் சுற்றளவில் பல நிரந்தர தற்காலிக அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் உள்ளன. சட்டவிரோதமாக அனுமதி கொடுத்தால் கடந்த மே ஒன்று 2024 விருதுநகர் மாவட்டத்தில் அவினூர் கிராமத்தில் நடந்த வெடி சம்பவம் போல் உயிர்பலி உள்ளிட்ட அனைத்தும் ஏற்படும் என்பதால் இவ்வாறு அரசு விதிமுறை வகுத்துள்ளது. எனவே சட்டப்படி கல்குவாரிக்கு அனுமதி தரக்கூடாது. மேலும் கூகுள் படங்களில் பல வீடுகள் கட்டப்பட்டுள்ளன. வடமேற்கு புறத்தில் 202 மீட்டரில் வட புறத்தில் 192 வது மீட்டரில் 209 மீட்டரில் வீடுகள் இருப்பது கூகுள் மேப்பில் காணப்பட்டுள்ளது. ஆறு வீடுகள் மொத்தம் உள்ளன. எனவே ரபீந்திரன் கல்குவாரி சட்டப்படி இயங்க முடியாது என தெரிவித்தார்.

<u>2. திரு.ஏ.சி. ராஜா, பாட்டாளி மக்கள் கட்சி, சேருகுடி</u>

இந்தக் கருத்து கணிப்பு கூட்டம் தும்பலம் ஊராட்சியில் நடத்த வேண்டிய அவசியம் என்ன? கல்குவாரி இருக்கும் இடம் சேருகுடி ஊராட்சி ஒன்றியம், நான் கூறுவது இந்தக் கருத்துக் கணிப்பு கூட்டம் நடத்துவது தவறு. ஏனென்றால் சேருகுடியிலிருந்து வந்திருக்கும் பொதுமக்களின் எண்ணிக்கை எத்தனை பேர்?

அதைப் பார்த்து நீங்களே இது சரியா தவறா என்று தெரிந்து கொள்ளலாம். சேருகுடி ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து வந்திருக்கும் மக்கள் இல்லை என்ற காரணத்தினால் நடத்துவது தவறு என்று கூறினார்.

அச்சமயம் கூட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களிடையே சலசலப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் தலையிட்டு அமைதிப்படுத்தினார். வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் அனைத்து மக்களுக்கும் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படும் என்று உறுதி அளித்தார், மீண்டும் கூட்டம் தொடங்கியது.

எல்லா பக்கமும் கனிம வளம் சுரண்டப்படுகிறது. அரசு மற்றும் நீதிமன்ற உத்தரபடி சீல் வைக்கப்பட்டிருக்கிறது. 1200 வீடுகள் குடியிருப்புகள் இருக்கும் ஊராட்சியில் அந்தப் பகுதியில் கிரஷரின் இயக்கம் மாசு ஏற்படுத்துவதாக தெரிவித்த அவர் அதனை ஆரம்ப சுகாதார நிலையத்தில் கணக்கிட்டு பாருங்கள். எத்தனை பேர் இருதய நோய் சம்பந்தப்பட்ட நோயாளிகள் இருக்கிறார்கள் என்று தெரிவித்தார். மேலும், சுமார் 370 பேர் இருதய நோய் சம்பந்தப்பட்ட நோயாளிகள் இருக்கின்றார்கள். எனவே இந்த இருதய நோய் இருக்கின்ற மக்கள் எப்படி இருக்க முடியும்.. எனவே கல்குவாரி அமைப்பதற்கு தடை போடுங்கள் என தெரிவித்தார்.

மேலும் கல்குவாரியில் தயார் செய்யப்படும் கல் எந்த வழியில் செல்லும், குடியிருப்பு பகுதியின் மத்தியில் ஒரு தெருமுனையில் எடுத்துச் செல்லப்படும் போது அங்கு குடியிருக்கும் மக்கள் குழந்தைகள் வயதானவர்கள் மற்றும் கால்நடைகளுக்கு பாதுகாப்பு இல்லை என கூறினார். இது மிகப்பெரிய மாசு பிரச்சினையாகும். அன்றாடம் அந்த சாலையில் 15 லிருந்து 20 லாரிகள் செல்லும் பொழுது எப்படி அந்த சாலையை பயன்படுத்த முடியும். சாலை பராமரிப்பு இன்றி சாக்டையை வெட்டியிருக்கிறார்கள். மேலும் அருகாமையில் குடியிருப்புகள் இருக்கின்றது. குவாரிகளில் வைக்கப்படும் வெடிகளின் சத்தமானது இருதய நோய் இருக்கின்ற மக்களையும் தாய்ப்பால் பருகும் குழந்தைகளையும்

பாதிக்கின்றது. எனவே இந்த கல்குவாரி இங்கு அமைவதில் எங்களுக்கு மாற்று கருத்து இருக்கின்றது என தெரிவித்தார்.

மேலும் குறைந்தபட்ச சாலையில் கற்களை எடுத்துச் செல்லும் வாகனம் பழுதாகி நின்றால் சாலையை பொதுமக்கள் பயன்படுத்த முடியாது. அதற்கு உண்டான வசதிகள் இல்லை. மேலும் குவாரி அமையவிருக்கும் இடத்தில் ஏற்கனவே குவாரி இயங்கி கற்கள் எடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் ஆழமாக கற்கள் வெட்டி எடுக்கும் பட்சத்தில் அருகில் இருக்கும் வீடுகளில் விரிசல் ஏற்படும் என தெரிவித்தார்.

குவாரியில் வைக்கப்படும் வெடியின் மூலம் கற்கள் வீடுகளின் மேல் விழும் அபாயம் இருக்கின்றது என தெரிவித்த அவர், அந்த குவாரி அமைந்திருக்கும் இடத்தை தற்போது பொதுமக்கள் திறந்த வெளி கழிப்பிடமாக 30–40 ஆண்டுகளாக பயன்படுத்தி வருகின்றார்கள். அவ்வாறிருக்க குவாரியில் வைக்கப்படும் வெடியினால் கற்கள் அவர்கள் மீது விழும் அபாயம் இருக்கின்றது என தெரிவித்தார். எனவே தனது கருத்துக்களின் அடிப்படையில் கல் குவாரிக்கு அனுமதி தரக்கூடாது என்று கேட்டுக் கொண்டார்.

3. <u>திரு.ராவணன் ராஜேஷ், தமிழக வாழ்வுரிமை கட்சி, திருச்சி மேற்கு மாவட்ட செயலாளர், சேருகுடி</u>

இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட சேருகுடி ஊராட்சியிலிருந்து பொது மக்கள் பங்கேற்றுள்ளார்களா என கேட்டார். கல் குவாரி அமையவிருக்கும் சேருகுடி ஊராட்சியில் இந்த கூட்டம் நடைபெறாமல் ஏன் தும்பலம் ஊராட்சியில் நடத்தப்படுகிறது என குவாரி உரிமையாளரிடம் கேட்கப்பட்டதற்கு, குவாரியின் உரிமையாளர் ஏறத்தாழ 500 மக்கள் கலந்து கொண்டு அமர்வதற்கு ஏற்ற இடவசதி சேருகுடி ஊராட்சியில் இல்லை என்பதை சுட்டிக்காட்டி எனினும் சேருகுடி ஊராட்சி சார்ந்த மக்கள் இந்த கூட்டத்தில் பங்கெடுக்கிறார்கள் என தெரிவித்ததாக கூறினார்.

மேலும், பத்துக்கும் மேற்பட்ட குவாரிகள் ஏற்கனவே சம்பந்தப்பட்ட ஊராட்சியில் இயங்கி கொண்டிருக்கிறது எனவும் அதன் தொடக்க காலத்தில்

இது போன்ற ஒரு பொது மக்களுக்கான கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்று இருக்கும் என தெரிவித்த அவர் குவாரிகளின் இயக்கம் தொடர்பான கட்டுப்பாட்டினை இதுவரையிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எதுவும் ஆய்வு செய்திருக்கிறார்களா என கேட்டார். ஏனென்றால் அத்துமிறல்களும் விதிமீறலும் இதற்கு முன் இயங்கித்தில் இருக்கின்ற குவாரிகளில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சாலை பழுதாவது, சாலை தொடர்ந்து பராமரிப்பின்றி இருப்பதால் எளிய மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இது போன்று நடக்காமல் இருப்பதற்கு அரசு அதிகாரிகள் ஆரம்பத்திலேயே குவாரிகளுக்கு கட்டுப்பாடு விதித்து அதை உறுதிப்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மக்கள் வாழ்வாதாரம் 90% வேலைவாய்ப்பு உறுதிபடுத்தப்பட வேண்டும். அங்கே இயங்கும் கிரஷர், கோழிப்பண்ணைகளில் அந்த கிராம மக்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்ய வேண்டும். பொதுமக்கள் கோரிக்கையை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். மேலும் இந்த குவாரிகளுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடானது குவாரிகள் இயங்கும் காலம் முடிவுறும் வரையில் அதை உறுதிப்படுத்தவும் குவாரிகளின் தேவையானது இந்த பொது மக்களுக்கு சேவையாக இருக்குமேயானால் சுற்றுச்சூழலின் பாதுகாப்பினையும் குவாரியின் சம்பந்தப்பட்ட ஊராட்சியில் வசிக்கும் பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பினையும் தான் கூறிய அனைத்தையுமே அரசு அலுவலர்கள் தலையிட்டு குவாரியின் அனுமதி வழங்கும் முன்னதாகவே உறுதிப்படுத்த வேண்டும் என தெரிவித்தார். அவ்வாறு செய்தால் தான் எந்த ஒரு சர்ச்சையும் புகார்களும் இல்லாத வண்ணம், இந்த நிறுவனம் இயங்க முடியும் என தெரிவித்தார்.

பொதுவாக குவாரிகளில் தடை செய்யப்பட்டுள்ள வெடிகளை பயன்படுத்துவதாக தெரிவித்த அவர் அரசு அதிகாரிகள் அவ்வாறு தடை செய்யப்பட்டுள்ள வெடிகளை குவாரிகளில் பயன்படுத்த தடை விதித்து அதனை உறுதிப்படுத்தவும் வேண்டும் எனவும் தெரிவித்தார். குவாரி அமையும் இடத்தில் இருந்து 1½ கி.மீட்டர் தொலைவில் இருக்கும் எங்கள் வீடு அதிர்கிறது.

தொடர்ந்து இயங்கும் கிரஷரை ஆய்வு செய்ய வேண்டும். ஒரு மலையை காணவில்லை என்றார்.

மேலும் குவாரிகளில் கற்கள் எடுப்பதனால் அது வீடுகள் கட்டுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது எனவே பொதுமக்களின் தேவைக்காக தான் குவாரிகள் இயங்கப்படுகின்றது. இது மனிதர்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்று. இருப்பினும் குவாரிகளின் இயக்கத்தினால் பொதுமக்களுக்கு எந்த ஒரு பாதிப்பு ஏற்படாத வண்ணம் குவாரிகளின் தேவையை பொதுமக்களுக்கு சேவையாக பயன்படும் பட்சத்தில் எங்களுக்கு மாற்றுக் கருத்து எதிர்ப்பும் இல்லை என்பதை சேருகுடி மக்களின் சார்பாக தெரிவித்தார்.

**4. திருமதி.ஷைனி, சாமானிய மக்கள் நல கட்சி, திருச்சி கிழக்கு மாவட்ட செயலாளர்**

இந்த கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் சேருகுடி கிராமப் பொது மக்களை கையை உயர்த்தும்படி கூறி பொது மக்களை பார்த்து கல் குவாரியால் ஏற்படும் பாதிப்பு பற்றி அறியாமல் கையை உயர்த்துகிறார்கள் என தெரிவித்தார். மேலும், இக்கூட்டத்தில் பங்கேற்க வந்த பொது மக்களில் சேருகுடி மக்களை யாரும் பதிவேட்டில் பதிவு செய்வதற்கு அனுமதிக்கவில்லை என தெரிவித்தார். எனவே இக்கல்குவாரியில் நிறைய ஊழல் இருக்கிறது என்றார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், சேருகுடி கிராமம் 378/232, 2C 380/432P, மற்றும் 381/2A P, 3.19.0 ஹெக்டேர் சுமார் 8 ஏக்கர் பரப்பில் கீழ்க்கண்ட காரணத்தினால் குவாரிக்கு அனுமதி அளிக்க கூடாது என கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்தார். அவர் கல் குவாரியின் மீது அதிக குற்றச்சாட்டுகள் உள்ளதாகவும் தெரிவித்தார். ஏற்கனவே மாநில சுற்றுச்சூழல் அனுமதி 19.01.2012 அன்று முதல் 5 ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் பெறப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட அனுமதி அளவை விட அதிக அளவில் கற்களை வெட்டி எடுத்துள்ளார்கள். கடந்த 5 ஆண்டுகளில் அதிகமாக கற்களை வெடி வைத்து எடுத்துள்ளார்கள் எனவும் இதனால் சேருகுடி மற்றும் சூரம்பட்டி கிராமத்தில் உள்ள வீடுகள் விரிசல்

ஏற்பட்டு சேதமடைந்துள்ளதாக தெரிவித்தார். சட்டத்திற்கு புறம்பாக அதிகமான வெடிமருந்து உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். மேலும் இப்படியே சென்றால் சில ஆண்டுகளில் சேருகுடி மற்றும் சூரம்பட்டி கிராமம் அழிந்து விடும் எனவும் வெடியின் சத்தம் காரணமாக இங்குள்ள கர்ப்பிணிப் பெண்கள் மிகவும் மோசமாக பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்திய மின்சார சட்டம் 1956–ன் பிரிவு 83–ன் படி உயர்மின் கோபுரத்திலிருந்து கல் குவாரி அமைக்க 1000 அடி (300 மீட்டர்) இடைவெளி இருக்க வேண்டும். ஆனால் கல்குவாரியின் கிழக்கு புற பகுதியில் கல்குவாரியின் வெளிபுற பகுதியிலிருந்தும் 300 மீட்டர் சுற்றளவிற்கு உள்ளேயே உயர் மின் கோபுரம் செல்கிறது. எனவே இந்திய மின்சார சட்டத்தின்படி கல்குவாரிக்கு அனுமதி தர முடியாது என தெரிவித்தார். மேலும் நாங்கள் கூறும் கருத்துக்களை அதிகாரிகள் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

5. <u>திரு.அசோக்குமார், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்– சேருகுடி</u>

தான் முப்பது வருடமாக உள்ளாட்சி பிரதிநிதியாக இருப்பதாகவும் கல் குவாரிகள் எண்ணிக்கையில் பெரிய அளவில் நடப்பதாகவும் இந்த கருத்துக் கேட்புக் கூட்டம் புதுமையாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

தான் அந்த ஊரில் வார்டு உறுப்பினராக இருந்த காலத்திலிருந்து சாலை அமைப்பதற்கான மனுவை கொடுத்து வருவதாகவும், இப்போது MGNRS திட்டத்தின் கீழ் சாலை 900 மீட்டருக்கு அரசு திட்டம் மூலமாக கப்பி சாலை போடப்பட்டுள்ளதாகவும் அதற்கு முன்னர் AGMT கிராமம் என்பதால் தார் ரோடு போடப்பட்டு அதை பராமரிக்க நிதி இல்லாமலும் அரசு விதிப்படி அந்த இடத்தில் சாலை அமைக்க முடியவில்லை. சமீபத்தில் ஒரு குவாரிக்கு அனுமதி கொடுத்து நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குள் கற்கள் எடுக்கப்படுகிறதா என்பதை அரசு அதிகாரிகள் ஆய்வு செய்கிறார்கள் என தெரிவித்த அவர் அந்த குவாரிக்கு சுரங்கம் மற்றும் கனிம வளத்துறையால் வழுங்கப்பட்ட நடை சீட்டில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது கோட்டாட்சியர் அவர்களால் கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது என தெரிவித்தார். அதனால் எந்தவொரு சட்ட விதிமீறல்களும் அரசு அதிகாரிகளை மீறியும் பொது மக்களை மீறியும் நடக்க வாய்ப்பு இல்லை என

தெரிவித்த அவர் அதனால் எந்தவொரு தனியார் கல் குவாரியாக இருந்தாலும் அரசின் சட்டவிதிகளுக்கு உட்பட்டே இயங்க முடியும் என தெரிவித்தார். பொதுவாக ஒரு கல் குவாரி அனுமதி பெறுவதற்கு முன்னர் எழுத்து வடிவில் அந்த ஊராட்சிக்குட்பட்ட தேவைகளை பூர்த்தி செய்து கொடுக்க உறுதி அளிக்கும் பட்சத்திலேயே குவாரிக்கு அனுமதி அளிக்கப்படுகிறது என தெரிவித்தார்.

கருத்து கேட்பு கூட்டத்தில் கருத்தை பதிவு செய்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ளதாகவும் அதே போல் கல் குவாரியை சட்டவிதிகளுக்குட்பட்டு இயக்குவதற்கு நிறுவனத்திற்கும் உரிமை உள்ளது என தெரிவித்த அவர் கல் குவாரி அமைப்பதற்கான ஆதரவை பதிவு செய்தார்.

6. <u>திரு. மலர் மன்னன், சாமானிய மக்கள் நல கட்சியின் திருச்சி வடக்கு மாவட்ட செயலாளர், அரங்கூர்</u>

இக்குவாரியானது தவறான ஆவணங்களை சமர்ப்பித்து இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு அனுமதி பெற்றுள்ளது என தெரிவித்தார். திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், சேருகுடி கிராம்ம் தி/ள் ரபீந்திரன் கல் குவாரி புல எண். 378/2B2, 2C, 380/ 4B2 –ல் ஆகியவற்றில் ஓடை, வாய்க்கால் நீர்நிலை இருந்தால் 50 மீட்டர் 175 அடி இடைவெளி விட வேண்டும் என சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டம் சொல்கிறது. கல்குவாரி அமையும் புல எண் 378 புலத்திலே இரண்டு ஓடை செல்கிறது. ஆனால் இதனை கிராம நிர்வாக அலுவலர் பதிவு செய்யும் போது ஓடை இருப்பதை மறைத்து புலப்பட வரைப்படத்தில் காட்டியுள்ளார் என கூறினார். சட்டத்திற்கு புறம்பாகவே விண்ணப்பித்துள்ளனர் என தெரிவித்தார். மீறி இந்த கல் குவாரிக்கு அனுமதியளித்தால் இந்த சேருகுடி கிராமமானது அழிவது உறுதி என தெரிவித்தார்.

மேலும் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், வீட்டு மனைகள், நிரந்தர கட்டுமானங்கள் சிறு கனிம விதிகள் சட்டம் 1959–ல் 220 மீட்டரில் வீடுகள் இருக்கிறது. ஆனால் வீடுகள் இல்லை என தாக்கல் செய்துள்ளனர். வீட்டில் யாரும் குடியிருக்கவில்லை, வீடுகள் சேதமடைந்து விட்டது என்று கூறுகிறார்கள். ஆனால் சிறு கனிம விதிகள் 1959 சட்டப்படி UDR

வருவாய்த்துறை ஆய்வின்படி வீடு சேதமடைந்தாலும் வீடு இருப்பதாகவே தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி தகவல் பெற்றுள்ளோம். ஆனால் இவர்கள் ஆவணத்தில் இல்லை என்று சமர்ப்பித்துள்ளனர். இந்த ரபீந்திரன் கல் குவாரிக்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணை குழும குறிப்பு எண். 10406Z நாள். 06.11.2023 அன்று கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் கடிதம் கொடுக்கும் முன்பே 01.10.2023 அன்றே ஆய்வு செய்யப்பட்டுள்ளது. கடிதம் கொடுப்பதற்கு 35 நாட்களுக்கு முன்பே ஆய்வு செய்யப்பட்டது சட்ட விதிமீறலாகும். இணையதளத்தில் 45 ஆவணங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஆனால் 10 ஆவணங்கள் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே இக்குவாரிக்கு அனுமதி அளிக்க கூடாது என தனது எதிர்ப்பை பதிவு செய்தார்.

7) <u>திரு. L.ஜோசப் – சாமானிய மக்கள் நல கட்சி– பொருளாளர், திருச்சி</u>

அரசு கல் குவாரியில் நடக்கும் ஊழலுக்கு தமிழக அரசும் அதிகாரிகளும் தான் பொறுப்பு என கூறிய அவர் தனியாருக்கு கல் குவாரி அனுமதி வழங்ககூடாது மீறி அனுமதித்தால் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் முற்றுகை போராட்டம் நடைபெறும் என தெரிவித்தார்.

8) <u>பிச்சைவேல் – மக்கள் சமுக நீதி பேரவையின் மாவட்ட செயலாளர், சிட்டிலரை முசிறி</u>

கல் குவாரிக்கு அனுமதி கொடுக்கும் பட்சத்தில் குவாரிகளில் பாறைகளை தகர்க்க வைக்கப்படும் வெடிமருந்தின் அளவானது அதிகமானதாகத்தான் இருக்கும் என கூறிய அவர் அதிக வெடி சத்தத்தின் அளவினால் அருகில் உள்ள கிராமங்களுக்கு பாதிப்பு ஏற்படும் எனவும் வீடுகள் சேதமடைகின்றன எனவும் தெரிவித்தார். மேலும், கற்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளின் வேகம் அதிகமாக இருப்பதால் அருகில் உள்ள பள்ளிக்கூடம் சத்துணவுக்கூடம் இருப்பதால் அவற்றின் மீது தூசிகள் பறப்பதாகவும் கற்கள் விழும் என்றும் தெரிவித்தார். சேருகுடி கிராமத்தில் சுற்றுவட்டத்தில் உள்ள கிணறுகள் அனைத்திலும் தண்ணீரின் அளவு 200 அடிக்கு கீழே சென்றுவிட்டது. முன்பு மலை இருந்ததாலும் தண்ணீர் இருந்ததாலும் விவசாயம்

செய்யப்பட்டது. ஆனால் தற்போது அந்த மலையே இல்லை. 200 அடிக்குமேல் மலையை வெட்டியுள்ளனர். சிலர் ஒரு குவாரிக்கு அனுமதி வாங்கிக்கொண்டு 5 குவாரிகளை நடத்துகின்றனர். அதிகாரிகள் ஆய்வு செய்வதும் இல்லை. சேருகுடி கிராமத்தில் குவாரிகளில் வெடி வைப்பதால் இரவில் தூங்க முடியவில்லை என்றும் காற்றில் வரும் மருந்து புகையானது அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் இதனால் பொதுமக்கள் பாதிப்படைகின்றனர் என்றும் தெரிவித்தார். வண்டி செல்லும் பாதை சிறியதாக உள்ளதால் குவாரியிலிருந்து கற்களை ஏற்றி செல்லும் வாகனங்களால் போக்குவரத்து நெறிசல் ஏற்படுவதுடன் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

எனவே, இக்கல் குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது என சேருகுடி மற்றும் சூரம்பட்டி ஊராட்சியின் சார்பாக தெரிவித்தார். மீறி மீண்டும் கல்குவாரிக்கு அனுமதி கொடுத்தால் 200 மக்களை ஒன்று சேர்த்து முசிறி வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவோம் என தெரிவித்தார்.

9) திருமதி. <u>பரமேஸ்வரி, சேருகுடி</u>

சேருகுடி கிராமத்தில் கல் குவாரி அமைக்கலாம் என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது. ஏன் என்றால் சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் என்ன செய்ய வேண்டுமோ அதை அரசு செய்துள்ளது என்று கூறிய அவர் சேருகுடியில் கல்குவாரி அமைத்தால் ஏழை மக்களின் வாழ்வாதாரம் முன்னேறும் என்ற நம்பிக்கை உள்ளது. ஆதலால் சேருகுடி கிரமத்தில் இக்கல் குவாரியை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

10) <u>திருமதி. ரவி, பாப்பாபட்டி</u>

கல் குவாரி உரிமையாளர்கள் பணத்தை எடுத்துக்கொள்வதாக நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். சேருகுடி, பாப்பாப்பட்டி மற்றும் சுற்றுப்பட்ட ஊர்களில் கனிம நிதியில் சாலை போடப்பட்டுள்ளது. பஞ்சாயத்திற்கு வருமானம் இருக்கிறது. 40 வயதிற்கு மேல் இருக்கும் ஓட்டுநர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆதலால் கல் குவாரி அனுமதி தருமாறு கேட்டுக்கொண்டார்.

**11) திரு. P. தாமோதரன் , சமூக ஆர்வலர், விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாவட்ட தலைவர் – தா.பேட்டை**

இந்த கல்குவாரிக்கு கருத்து ஏற்பு கூட்டத்தை ஏற்பாடு செய்து நடத்திக் கொண்டிருக்கும் அரசுக்கு பொதுமக்கள் சார்பாக மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கின்றேன். சேருகுடி கிராமமானது பாறைகள் நிறைந்த கிரமமாக இருப்பதாக கூறினார். இப்பகுதியில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் மழை பெய்யும், குளம் குட்டை நிரம்பும், விவசாயம் செய்வார்கள். இக்குவாரிக்கு அரசு சட்டவிதிகளுக்குட்பட்டு அனுமதி அளித்தால் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என தெரிவித்தார். விதிகளை மீறி இயக்கும் கல்குவாரிகளுக்கு பொதுமக்களாகிய நாங்களே எதிர்ப்பு தெரிவிப்போம் என தெரிவித்தார். 30 ஆண்டுகளுக்கு முன்னதாக அந்த பகுதியில் குவாரி அமைத்து இயக்கிக் கொண்டிருந்தார்கள். இங்கு விவசாயம் கிடையாது. விவசாயம் இல்லாத காலத்தில் இங்கே உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் உட்பட பொதுமக்கள் அனைவரும் கைகளால் கற்களை உடைத்து குவாரிகளில் வேலை செய்து வந்தனர். அதன் மூலம் வந்த சம்பளத்தை வைத்து பொதுமக்கள் இங்கு அவர்களுடைய குடும்பத்தை நடத்தி வந்தனர். மற்றபடி இந்த சேருகுடி ஊராட்சியில் ரோடு வசதிகள் முன்னதாக இல்லை. ஆனால் தற்பொழுது உள்ளாட்சி பிரதிநிதிகள் வந்த பிறகு சமுதாயக்கூடம் கட்டிக் கொடுத்துள்ளனர், கோயில்களை புணரமைத்துள்ளனர், சாலை வசதிகளை ஏற்படுத்தி தந்துள்ளனர். அப்படி இருக்கும் இந்த சூழலில் சேருகுடி ஊராட்சியில் ஏன் இந்த கல்குவாரி இயங்க வேண்டும் எனக் கேட்டால் இங்கு சேருகுடி ஊராட்சியில் பாறைகள் இருக்கின்றது. அதனால் கல்குவாரிகள் அமைக்கின்றனர். இதுவே காவிரி ஆற்றங்கரையோரம் மணல் கிடைக்கின்றது அதனால் மணல் எடுக்கின்றார்கள். ஆகவே அங்கு மணல் கிடைப்பதால் மணல் எடுக்கின்றனர் அதேபோல் இங்கு கற்கள் கிடைப்பதால் முறையான அரசின் அனுமதி பெற்று கல்குவாரியை அமைகின்றனர்.

சென்னையில் 250 ஏரிகள் இருந்தன. அவைகளை அரசு மூடி மக்களுக்கு குடியிருப்புகளை உருவாக்கித் தந்துள்ளது. ஏனென்றால் மக்கள் தொகை அதிகமானதால் இந்த முயற்சியை அரசு செய்தது. ஆகவே மக்களுக்காகத்தான் அரசு இதை செய்து கொண்டிருக்கிறது. எந்த ஒரு

நிலையிலும் அரசு மக்களை அடிமையாக்கவோ துன்புறுத்தவோ கிடையாது. ஆகையினால் அரசுக்கு தெரியும் இந்த மக்களை எப்படி காப்பாற்ற வேண்டும் என்றும் நல்வழிப்படுத்த வேண்டும் என்றும். ஆனால் அரசிற்கு நாம் நம்முடைய யோசனைகள் சொல்லலாம். அதற்காகத்தான் இந்த கருத்து கேட்பு கூட்டம் என்பது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே ஏழு அல்லது எட்டு கிரஷர் தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கிறது. இருப்பினும் இந்த குவாரிக்கு அனுமதி வழங்குங்கள் என தெரிவித்தார். அனுமதியை மீறி இந்த குவாரிகள் செயல்பட்டால் நானே முதல் ஆளாக நின்று அதை எதிர்ப்பேன் என தெரிவித்தார். ஆகவே சட்டத்திற்கு உட்பட்டு குவாரிக்கு அனுமதி கொடுங்கள். அதன் மூலம் இங்கே இருக்கும் பொது மக்களுக்கு வேலைவாய்ப்பிற்கு உறுதியளிக்க தெரிவித்தார். செய்து கொடுங்கள். அரசின் அனுமதிக்குட்பட்டு பாதுகாப்பாக இயங்க வழிவகை செய்ய வேண்டும் என தெரிவித்தார்.

12) <u>திரு. கனகராஜ9 – சூரம்பட்டி பஞ்சாயத்து</u>

எனக்கு எழுத படிக்க தெரியாது. இருந்தாலும் மாசுகட்டுப்பாடு என்பது எல்லா வகையிலும் வரலாம். அதுபோல நகரத்திற்கு அருகே இருக்கும் போக்குவரத்தினால் ஏற்படும் புகை மாசு கட்டுப்பாடு தான். அதுபோல இந்த சேருகுடி ஊராட்சியில் கல்குவாரி இயங்குவதை தடை செய்ய கூடாது. இதுபோல் சிலர் வருமானம் இருப்பதால் சம்பாதிக்கிறார்கள். எங்களைப் போன்றவர்களுக்கு கல்குவாரிகள் இயங்குவதால் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. தடை செய்பவர்களுக்கு வருமானம் இருக்கிறது. எங்களுக்கு வருமானம் இல்லை. ஆதலால் கல்குவாரி அமைத்து தருமாறு அதிகாரிகளை கேட்டு கொண்டார்.

13) <u>திரு. சுந்தர்ராஜன் – சிட்லறை</u>

எனக்கு 73 வயது. பெருந்தலைவர் காமராசருடன் நடந்து சென்றுள்ளேன். பெரியாருடன் இருந்துள்ளேன். நான் ஒரு சமூக ஆர்வலர். சிறந்த தலைவர்களுடன் பணியாற்றியுள்ளேன். ஏற்கனவே சில கிரஷர்கள் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது, ஆரம்பிக்கபோகும் கல் குவாரிக்கு ஏன் இவ்வளவு கண்டிஷன். தற்போது மீண்டும் பழைய கல்குவாரியை இயக்க அரசு

விதிகளின்படி நடப்பதால் உங்களுக்காக கூட்டம் நடத்தப்படுகிறது. 1971 முதல் அரசியலில் பல பொறுப்புகளை வகித்துள்ளேன். நான் சமூக ஆர்வலர் என்பது இங்கே ஊராட்சியில் உள்ள எல்லா பொது மக்களுக்கும் தெரியும். ஏரியை துார்வாருங்கள், வாரியை துார்வாருங்கள் என்றார்கள், ஆனால் இக்குவாரியினர் சொந்த செலவில் ஆழம் செய்கிறார்கள். இங்கு பல கிரஷர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறது. அப்படி இருக்க சமூக ஆர்வலர்கள் எங்கு சென்றார்கள் என கேட்டார்.

14) <u>திரு. முருகேசன், அட்லாபட்டி</u>

நாடு முன்னேற வேண்டும் என்றால் தொழில் முன்னேற வேண்டும் எனக் கூறிய அவர் தொழில் என்பது நியாயப்படி நடக்க வேண்டும் என தெரிவித்தார். கிரஷர் தொழில் என்பதை முதலில் அரசியல்வாதிகள் மட்டுமே செய்து வந்தனர். இப்படி இருக்க ஒரு சாமானிய மனிதர் இந்த கல்குவாரியை தொடங்க இருக்கிறார். அவருக்கு நாம் பக்கபலமாக இருக்க வேண்டும் என தெரிவித்தார். குவாரி இயங்குவதால் பஞ்சாயத்திற்கு வரி செலுத்தப்படுகிறது, இதனால் சாமானிய மக்களின் வாழ்வாதாரம் உயரும். ஆனால் அது சட்டத்திற்கு உட்பட்டதாகவே நடக்க வேண்டும் என தெரிவித்தார். நிர்ணயித்த அளவிற்கு மேல் கற்களை குவாரிகள் எடுத்தால் பொதுமக்களான நாங்களே அதற்கு எதிர்ப்பு தெரிவிப்போம் என கூறினார். எனவே இந்த குவாரியானது தொடங்கும் பட்சத்தில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணமும் அரசின் நிர்ணயித்த அளவிற்கு கற்களை எடுத்து சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு இயங்கினால் எங்களுக்கு எந்த ஆட்சேபினையும் இல்லை என தெரிவித்தார்.

15) <u>திரு.ராஜீவ்காந்தி – அய்யம்பாளையம்:</u>

இந்த கூட்டத்தில் பல பேர் இந்த குவாரிக்கு எதிர்ப்பினை தெரிவித்தார்கள், அப்படி இருக்கின்றவர்கள் எல்லாரும் மாளிகையில் வசித்து வருகின்றனர், ஆனால் எங்களைப் போன்ற சாமானியர்கள் இன்னும் குடிசையில்தான் வாழ்ந்து வருகின்றனர் என தெரிவித்தார். எனவே கல்குவாரி இயங்குவது இந்த மக்களுக்கு சாதகமாக இருக்கும் எனக் கூறினார்.

16) <u>திரு.மதியழகன் , பாரதிய ஜனதா கட்சியின் தா.பேட்டையின் தெற்கு மண்டல பொருளாளர் நீளியாம்பட்டி:</u>

இங்கிருக்கும் பல கிரஷர் தொழிற்சாலைகளில் குறைபாடு இருப்பது எனவும் அதனை தீர்த்து வைப்பதற்கு இந்த சமூக ஆர்வலர்கள் முயற்சி செய்யலாம் என தெரிவித்த அவர் இந்த கல்குவாரிக்கு சட்ட விதிமுறைக்குட்பட்டு அனுமதி வழங்கலாம் என தனது கருத்தினை பதிவு செய்தார்.

17) <u>திருப்பதி சேருகுடி:</u>

குவாரிக்கு 400 மீட்டர் அருகில் எனது வீடு உள்ளது. இந்த கல்குவாரிக்கு அனுமதி கொடுப்பதற்கு எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை, இந்த கிரஷர் குவாரி அமைவதால் எந்தவிதமான பாதிப்பும் இல்லை. ஆதலால், இந்த குவாரிக்கு அனுமதி வழங்குங்கள் என தெரிவித்தார்.

18) <u>திருமதி. தமிழ்ச்செல்வி– சாமானிய மக்கள் நலகட்சி– காட்டுப்புத்தூர் நகர செயலாளர்</u>

இங்கு ஒரு தோழர் சொன்னார். இங்கு கல்குவாரி வேண்டுமென்றால் கையைத் தூக்குங்க என்று கேட்டார் என்று தோழர் சொன்னவுடன் மக்கள் அனைவரும் கைதூக்கினார்கள் நானும் பார்த்தேன். கிராமத்து மக்களுக்கு உங்களுக்கு நல்லது எது கெட்டது என்று தெரியாது ஆதலால் நாங்கள் உங்களுக்கு உதவ முன்வந்துள்ளோம், நான் பேசிக்கொண்டு இருக்கும்போது சேருகுடி மக்கள் எல்லாம் கீழே சென்று உள்ளார்கள். உங்களுக்கு என்ன பாதிப்பு என்று தெரியாததால் கீழே சாப்பிட சென்று விட்டீர்கள். கரூர் அருகில் மூன்று வருடங்களுக்கு முன்பு ஜெகநாதன் என்பவரை கல்குவாரி ஓனர்கள் முன்பு விட்டு பின்பு லாரி ஏற்றி கொன்று விட்டார்கள், ஊர் மக்களாகிய நீங்கள் அனுமதி கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள், ஆனால் அதன் விளைவு உங்களுக்கு தெரியாது எனக்கு நன்றாக தெரியும். தெருவில் உட்கார்ந்து இருக்கும்போது லாரியிலிருந்து தலையில் கற்கள் விழுந்தால் என்ன செய்ய முடியும், அவர்கள் பகலில் கற்கள் கொண்டு செல்லமாட்டார்கள். விடியவிடிய இரவில்தான் கற்கள் கொண்டு செல்வார்கள். அப்பொழுது தலையில் கற்கள்

விழுந்தால் என்ன செய்ய முடியும், ஒரு தோழர் சொன்னார் இந்த கல்குவாரி ஓடாத நாள் சந்தைக்கு செல்லவில்லை என்று கூறினார். நான் கேட்கிறேன் இவ்வளவு நாள் சந்தைக்கு செல்லாமல் சாப்பிடாமல் இருந்தீர்களா? என்று கேட்கிறேன். நானும் என் வீட்டுக்காரரும் ஒரு டீக்கடையில் வேலைக்கு சென்று எச்சில் டம்ளர் கழுவி உழைத்துக் கொண்டு இருக்கிறோம்.

எல்லோரும் சொல்கிறார்கள் கல்குவாரி வேண்டும். ஆனால் உங்களுக்கு தெரியாதா 100 நாள் வேலைக்கு சென்றால் 200 ரூபாய் கிடைக்கும் அதை வைத்து பிழைக்க முடியாதா என்று? இந்த கல்குவாரி வைத்து தான் இவ்வளவு நாள் பிழைத்தீர்கள் என்று சொல்லுங்க பார்க்கலாம். கல்குவாரி பற்றியும் கற்கள் உடைப்பது பற்றியும் அதன் பாதிப்புகள் பற்றியும் பாமர மக்களுக்கு தெரியவில்லை. இதனால் இதையும் மீறி கல்குவாரி அனுமதி கொடுத்தீர்கள் என்றால் நாங்கள் சாமானிய மக்கள் நல கட்சி மூலம் 200 முதல் 300 மக்களை திரட்டி நடுநோட்டில் இறங்கி உட்கார்ந்து உண்ணாவிரத போராட்டம் செய்வோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

19) <u>திரு. நீ. கேசவன் – பாட்டாளி மக்கள் கட்சியின் நகர செயலாளர் – தொட்டியம்</u>

இங்கு வந்து இந்த குவாரிக்கு ஆதரவு கொடுக்கும் பொது மக்களுக்கு ஒன்று தெரியவில்லை. நாளைக்கு இந்த குவாரி கற்களை ஏற்றிச்செல்லும் வாகனத்தினால் விபத்து நடக்கும் பொழுது இன்றைக்கு நாங்கள் சொல்லும் கருத்து உங்களுக்கு புரிய வரும் என தெரிவித்தார்.

20) <u>திரு.வெங்கடேசன் – பொறியாளர் – பெரம்பலூர்:</u>

திருச்சி, கரூர், பெரம்பலூர், மற்றும் துறையூரில் உள்ள கிரஷர் இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் சேவைப்பொறியாளராகப் பணியாற்றி வருகிறேன். புதிதாக அமைய இருக்கும் குவாரியின் நவீன இயந்திரங்கள் கொண்டுதான் இயக்கப்பட இருக்கிறது. அதில் மாசு என்பது என்னவென்றால் கழிவு மற்றும் சத்தம். இக்குவாரியை பொருத்தவரையில் கழிவு என்பது கற்களை வெட்டி எடுக்கப்படுவது. ஒலி என்பது வெடி வைப்பதனால் ஏற்படுகிறது. நவீன

முறையில் குறைவான பவுடரும் ஆழமான துளையிட்டும் வெட்டி எடுக்கப்பட இருக்கிறது. மேலும் ஹைட்ராலிக் முறையை பயன்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்பட இருக்கிறது. மேலும் இக்குவாரி இயக்கத்தினால் அபாயகரமான கழிவுகள் ஏதும் உருவாகாது.

இந்தியா முழுவதும் குவாரிகள் இயங்கி வருகிறது. இன்று இந்த கற்களை எடுக்கவில்லை என்றால் "மேக் இன் இந்தியா" என்ற திட்டமே இருக்காது. ஆற்று மணலை எடுக்காததால் நாம் அவற்றை இறக்குமதி செய்கிறோம். இறக்குமதி செய்வதை தவிர்த்து இங்குள்ள கற்களை உடைத்து உபயோகிக்க வேண்டும் என்றார். நம் நாட்டின் வளத்தை நாமே உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்றார்.

**வருவாய் கோட்டாட்சியர், முசிறி வருவாய் கோட்டம், திருச்சி மாவட்டம்.**

வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் மேற்கண்ட குவாரி தொடர்பான பொதுமக்களின் கருத்துகளை சென்னையில் உள்ள SEIAA அமைப்பிற்கு அனுப்பி அதன் மூலம் உரிய முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார். பொதுமக்களின் கருத்துக்கள் ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்ட பதிவுகளும் மற்றும் கூட்ட நடவடிக்கைகளும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் SEIAA–விற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

இதையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துக்கூற முன்வராததால் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருச்சிராப்பள்ளி அவர்கள் மனுக்கள் ஏதேனும் இருந்தால் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டு, பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவு பெற்றதாக தெரிவித்தார்.

**கீழ்க்கண்டவைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்டுபுக் கூட்டம் குறித்த செய்தி வெளியீடு (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2. பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்டோரின் வருகைப் பதிவேடு.

3. பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தின் ஒளிப்பதிவு குறுந்தகடு

4. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

5. பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மற்றும் தபால் மூலம் பெறப்பட்ட மனுக்கள் –94.

27/9/2024

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

27/9/2024

**வருவாய் கோட்டாட்சியர்,**
**முசிறி கோட்டம்,**
**திருச்சிராப்பள்ளி, மாவட்டம்.**